DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 13/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : குருசாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th February 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கரிவலம்வந்தநல்லூரில் குடியிருந்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இரவு 7.30 மணியளவில் வீட்டிற்கு சாமான்கள் வாங்கிவிட்டு எனது சைக்கிளில் கரிவலம்வந்தநல்லூர்– ராஜபாளையம் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக ஓரமாக சென்றுகொண்டிருந்தேன். அப்போது புதுமாரியம்மன் கோவில் அருகே நான் போய்கொண்டிருந்தபோது வடக்கிலிருந்து தெற்காக ஒரு அரசுப்பேருந்து வேகமாக வந்து எனது சைக்கிள் மீது மோதியது. நான் கீழே விழுந்ததில் கையில், மூக்கில், வலது காதில் ரத்தம் வந்து காயம் ஏற்பட்டது. எனது வலது தொடையிலும் காயம் ஏற்பட்டது. எனதுமேல்தாடையில் 3 பற்கள் கீழே விழுந்துவிட்டன. எனது மகன் ராஜாவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு என் மகன் சம்பவ இடத்திற்கு வந்தார். என்னை அங்கிருந்து சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு

சேர்த்தார்கள். மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். விபத்து பற்றி சாட்சி கந்தன், மகேந்திரன், ராஜா ஆகியோர்களுக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எனக்கு விபத்து ஏற்படுத்திய அரசுப்பேருந்தின் ஓட்டுநர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்து சம்பந்தமாக எனது மகன் ராஜா புகார் கொடுத்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். ராஜபாளையத்திலிருந்து சங்கரன்கோவிலுக்கு ஒருநாளைக்கு நிறைய அரசு பேருந்துகள் செல்லும் என்றால் சரிதான். எனக்கு விபத்து ஏற்படுத்திய அரசுப்பேருந்து இரவு 7.30 மணிக்கு வடக்கிலிருந்து தெற்காக வந்த அரசுப்பேருந்து என்றால் சரிதான். புதுமாரியம்மன் கோவில் அருகில் சாலையின் இருபுறத்திலும் நிறைய கடைகள் உண்டு என்றால் சரிதான். விபத்தின்போது மேற்படி கடைகள் திறந்திருந்தன என்றாலும், அந்த கடைகளிலிருந்து நபர்களுக்கு விபத்து பற்றி தெரியும் என்றாலும் சரிதான். நான் விபத்து ஏற்பட்டுகீழே விழுந்தபிறகு எனக்கு சுயநினைவு இல்லை என்றால் சரிதான். எனக்கு சுயநினைவு இல்லாத சமயத்தில் மேற்படி கடைகளிலிருந்து நபர்கள்தான் விசாரித்து எனது மகன் ராஜா மற்றும் கந்தனுக்கு தகவல் சொல்லி அவர்கள் விபத்து நடந்த இடத்திற்கு வந்தபிறகு என்னை மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று நான் வீட்டுககு வாங்கிய சாமான்களை சைக்கிளில் முன்பக்மகம் வைத்தேனா அல்லது பின்பக்கம் வைத்தேனா என்றால் சைக்கிளின் முன்பக்கத்தில் வைத்துதான் வீட்டுக்கு வாங்கிய காய்கறிகளை கொண்டு சென்றேன். போலீசார் என்னை விசாரித்தபோது எனக்கு விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தின் பதிவெண்ணை கூறினேனா என்றால் இல்லை. எனக்கு விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தின் ஓட்டுநர் பெயரை போலீசார்

விசாரணையில் நான் கூறினேனா என்றால் இல்லை. எனக்கு ஓட்டுநர் பெயர் தெரியாது. எனக்கு குடிப்பழக்கம் உண்டா என்றால் எப்போவாது குடிப்பேன். விபத்து நடந்த சமயத்தில் நான் மது அருந்திவிட்டு எனது சைக்கிளில் சென்றேனா என்றால் இல்லை. எனக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் நான் குடித்திருந்தேன் என்று சொல்லி மதுவாடை என்னிடமிருந்து வந்ததாக குறிப்பிட்டிருந்தார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. நான் விபத்து நடந்த நாளில் மது அருந்திவிட்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்தேன் என்றாலும், நான் சைக்கிளை சரியாக ஓட்டாமல் நிலைதடுமாறி எதிரில் வந்த ஏதோ ஒரு அரசுப்பேருந்தின் வலது பக்கவாட்டில் மோதி எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி உண்மைவிபரங்களை மறைத்து எனது மகன் ராஜா பொய் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியதுபோல் அரசுப்பேருந்து வேகமாக வந்து மோதியதால் எனக்கு விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 13/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : தங்கஇருளப்பன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th February 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது வீரணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி கிருஷ்ணமூர்த்தி என்பவரை எனக்கு தெரியும். 02.10.2016 ம் தேதி காலை 7.30–8 மணியளவில் கரிவலம்வந்தநல்லூரில் உள்ள புதுமாரியம்மன் கோவில் பக்கம் நின்றுகொண்டிருந்தபோது கரிவலம்வந்தநல்லூர் போலீசார் என்னை விசாரித்தார்கள். அங்குவைத்து போலீசார் படம் வரைந்தார்கள். அங்கு வைத்து போலீசார் எழுதிக்கொண்டதில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அதில் நானும், கிருஷ்ணமூர்த்தியும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.1 குருசாமி எனது மாமனார் என்றால் சரிதான். நான் கையொப்பம் போட்டுக்கொடுத்த காகிதத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கரிவலம்வந்தநல்லூர் போலீசார் என்னிடமும், கிருஷ்ணமூாத்தயிடமும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் கூறியவாறு காவல்துறையினர் புதுமாரியம்மன்கோவில் அருகே உள்ள விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அந்த இடத்தில் வைத்து பார்வை மகஜரில் நானும், கிருஷ்ணமூர்த்தியும் கையொப்பம் போடவில்லை என்றாலும், அ.சா1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.